



# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 59

# பிரதமரானார் ரணில் விக்கிரமசிங்க!





இலங்கையின் புதிய பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்றைய தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலையை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகினார். இதனை அடுத்து அமைச்சரவையும் கலைக்கப்பட்ட நிலையில், புதிய பிரதமர் நியமனம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 மணி முதல் நாடு முழுவதும் மீண்டும் ஊரடங்கு

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 16 வது பிரிவின் விதிமுறைகளுக்கு இணங்க நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டம் இன்று காலை 6 மணி முதல் தளர்த்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இன்று (13) பிற்பகல் 02.00 மணிக்கு நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்படும். இவ்வாறு அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் நாளை (14) காலை 6 மணி வரை அமுலில் இருக்கும் என ஜனாதிபதி ஊடக பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட எழுத்துப்பூர்வ அனுமதியின் கீழ் அன்றி பொது வீதி, புகையிரத பாதை, பொது பூங்கா, பொது விளையாட்டு மைதானம் அல்லது கடற்கரையில் எவரும் தங்குவதற்கு மற்றும் நடமாடுவதற்கு அனுமதி இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

## O/L நுழைவுச் சீட்டு விநியோகம் இன்று முதல்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான நுழைவுச் சீட்டு விநியோகம் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கான நுழைவுச் சீட்டு பரீட்சைகள் திணைக்களத்தினால் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாகவும் தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் ஊரடங்குச் சட்டம் காரணமாக நுழைவுச் சீட்டு விநியோகம் தாமதமாகியுள்ளதாக தபால் மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார். பரீட்சைக்கான நுழைவுச் சீட்டு விநியோகத்தை எதிர்வரும் திங்கட்கிழமையுடன் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




## பகுதி நேர வகுப்புக்கள் நடத்த தடை

கல்விப் பொதுத் தராதர பத்திர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இதனை முன்னிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் பரீட்சை முடிவடையும் வரை பகுதி நேர வகுப்புக்கள், செயலமர்வுகள், மீட்டல் பயிற்சி வகுப்புக்கள் என்பனவற்றை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது. மேலும், எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய வினாப்பத்திரங்களை அச்சிடுவதும் விநியோகிப்பதும் தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான வினாப்பத்திரங்கள் வழங்கப்படும் என்று விளம்பரப்படுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க டொலரின் விற்பனை விலை 365 ரூபாவாக பதிவு

பல அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் அமெரிக்க டொலரின் விற்பனை விலை இன்று 365 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் இலங்கை மத்திய வங்கியின் டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்றைய தினம் 377.49 ரூபாவாக பதிவாகி இருந்தது. அத்துடன், பல அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கிகளில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை நேற்றைய தினம் 380 ரூபாவை அண்மித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வன்முறை சம்பவங்கள் தொடர்பில் தகவல் கோரப்பட்டுள்ளது

பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களுக்கு விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. நாட்டில் சட்டவிரோத கும்பல், வன்முறைக் குழுக்கள் மற்றும் பொது / தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், கொள்ளையடித்தல் மற்றும் தாக்குதல் போன்ற குற்றச் செயல்கள் தொடர்பாக பின்வரும் இலக்கங்களுக்குத் தெரிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் 0767393977, 0112441146 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் 118 என்ற அவசர தொலைக்பேசி இலக்கத்துக்கு அழைத்து இது போன்ற குற்றச் செயல்கள் தொடர்பில் அறிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.



# பிரதமரின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமனம்

புதிய பிரதமரின் செயலாளராக சமன் ஏக்கநாயக்கவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார். இவர் இலங்கை நிர்வாக சேவையில் விசேட தர ஓய்வு பெற்ற அதிகாரியாவார். 2015-2019 ஆம் ஆண்டுக்கான நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மூன்று தடவைகள் பிரதமரின் செயலாளராக நியமிக்கப்பட்ட ஏகநாயக்க, இம்முறை நான்காவது முறையாக பிரதமரின் செயலாளராக நியமிக்கப்படவுள்ளார்.

ஏகநாயக்கபேராதனைப்பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்பட்டத்தையும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இளைஞர் விவகாரம், விளையாட்டு, சமுர்த்தி, வீடமைப்பு, கைத்தொழில், வெளிவிவகார மற்றும் நிதி ஆகிய அமைச்சுகளில் 30 வருடங்களுக்கும் மேலாக சேவையாற்றிய இவர், மலேசியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் லண்டனில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்திலும் சேவையாற்றியுள்ளார்.



# முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு அம்பாறை திருக்கோவிலில் ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

கஞ்சி பரிமாறுவோம் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த கதை பகிர்வோம் என்ற தலைப்பில் முள்ளிவாய்க்கால் அவல நிலை குறித்து அதனை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை (மே -12) இல் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வினை வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் ஏற்பாடு செய்திருந்தனர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் திருக்கோவில் மண்டானை பிள்ளையார் ஆலயத்தில் ஒன்று கூடியவர்கள் உப்பில்லாத கஞ்சியினை அவ்விடத்தில் காச்சியதுடன் அதனை சிரட்டையில் கொண்டு வீதியினால் சென்றோர்கள் மற்றும் பஸ் தரிப்பிடங்களில் இருந்தோர்கள் என பலருக்கும் வழங்கினார்கள். அத்துடன் முள்ளி வாய்க்கால் கஞ்சி என்ற துண்டுப் பிரசுரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.

அத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது. 2009 இறுதி யுத்த காலப்பகுதியில் மக்களை மரணமும் பசியும் சூழ்ந்திருந்தது. பணத்திற்கு எந்த பெறுமதியும் இருக்கவில்லை. வாங்குவதற்கு எந்த உணவுப் பொருளும் இருக்கவில்லை. இந்நிலையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும் சில தொண்டு நிறுவணங்களும் இணைந்து உயிர் பிழைப்புக்கென முள்ளி வாய்க்கால் கஞ்சி என்கின்ற ஜீவாமிர்தத்தை அறிமுகப்படுத்தினர்.

நீரினுள் அரிசியை இட்டு கிடைத்தற்கரிய உப்பையும் இட்டு காய்ச்சி உருவாக்கப்பட்டதே இவ்வுணவாகும். இவ் உணவினை பெற்றுக்கொள்ள சிறுவர்கள்முதியவர்கள் கர்ப்பினி பெண்கள் போன்றோர் வெறும் வயிற்றுடன் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். இதன்போது கொத்துக் குண்டுகளாலும் விமானத் தாக்குதல்களாலும் பல்லாயிரம் உயிர்கள் காவுவாங்கப்பட்டன. நீதி கேட்டு போராடும் எம் மக்களின் அவலக்குரல்களை இந்த உலகம் செவிமடுக்கும் நாள் வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி பெருவலியாகவும் அடையாளமாகவும் உணர்த்தப்படவேண்டியது வரலாற்று கடமையாகும் என்றும் உணர்வுபூர்வமான இப்பெரும் மக்கள் எழுச்சியின் போராட்ட வழிமுறைகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும் என விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த காலப் பகுதியில் படுகொலை செய் யப்பட்ட உறவுகளின் நினைவாக முள்ளி வாய்க்கால் கஞ்சிவாரம் அனுஸ்டிக்கப்படுகிறது. குறித்த நிகழ்வானது மே-12 தொடக்கம் மே-18 வரை முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரத்தினை நினைவு சுறும் தினமாக மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நினவு கூறப்படவுள்ளது. இதேவேளை இவ் வருடமே முதல் தடைவையாக கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை திருகோ காணமலை முள்ளிவாய்க்கால் கஞ்சி வாரம் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது.



# கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் விடுதலை

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று (12) கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதவான் பி.ஆர் இஸ்மாத் ஜெமில் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த 12 இந்திய மீனவர்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பத்திரம் இன்றைய தினம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதாவது அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசித்தமை இழுவை மடி வலைகளை உடமையில் வைத்திருந்தமை இழுவை மடி வலைகளை பயன்படுத்தி தொழில் மேற்கொண்டது ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

குற்றச்சாட்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடகால சிறை தண்டனையை விதித்து விடுதலை செய்தார். அத்துடன் படகு உரிமம் தொடர்பிலான விளக்கத்திற்கு தவணையிடப்பட்டுள்ளது. இதேநேரம் வழமைபோன்று இன்றைய தினம் இந்திய துணை தூதரக அதிகாரிகளும் மண்ணில் சமூகமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.